# எழுத்தாளர் மகாநாடு

நல்லூர் — 17-10-86

- நோக்கம்
- அரசியல் தீர்மானம்
- நிகழ்ச்சிகள்
- கலாசார தீர்மானம்

1986

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

# வரலாற்றுக் கடமையை முன்னெடுத்துச் செல்லும் பணியில்.....

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக— 33 ஆண்டுகளாக, இயங்கிவரும் எழுத்தாளர்களின் மூத்த இலக்கிய நிறுவனம். ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியுடனும் வரலாற்றுடனும் அது பின்னிப் பிணைந்தது. ஈழத்தமிழிலக்கியப் பரப்பிலே புதுமையும் ஆற்றலும் மிக்க ஆக்க இலக்கியங்கள் தோன்றவும், புதிய இலக்கியக் கருத்துக்கள் பரம்பவும், நமது யுகத்தின் சிந்தனைகளை எம்நாட்டின் சூழ் நிலையுடன், கலாசாரத்துடன் இணைத்து, எம் மண்ணின் வாழ்வோடு, எம் மக்களின் ஆசை அபிலாசைகளைப் பிரதிபலித்து, இலக்கியத்தை தேசியப் பிரச்சனைகளுடன் இணைப்பதிலும் இ. மு. எ. ச, முன்னோடியாக விளங்கியது. அது ஈழத்து இலக்கியத்தின் தனித்துவம் பெற்ற தேசிய மரபை வற்புறுத்தி, நமது இலக்கியத்தின் கொடுமுடியான நாவலர் பெருந்தகையின் வரலாற்றுப் பாத்திரத்தை புதிய பார்வையில் முன்னிறுத்தியது. நவாலியூர் சோமசுந்தரப் புலவரை தேசவியாபிதமாக உயர்த்தியது. கணேசையர் கையளித்த மரபை முன்னெடுத்து வளர்த்தது; முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள், அறிஞர் சித்தி லெவ்வை, பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சாமி முதலியோருக்கு விழாவெடுத்து இலக்கியப் பெருமை சேர்த்தது. தமிழறிஞர்கள் பண்டிதமணி சி. க; புலவர்மணி பெரியதம்பி மற்றும் மூத்த எழுத்தாளர்கள் சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், அ. ந. க., அ. செ. மு.. வரதர் முதலியோர் இ. மு. எ. ச, மாநாடுகளில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஈழத்து இலக்கியத்தின் முன்னும், எழுத்தாளர்கள் கலைஞர்கள் முன்னும் தோன்றிய சகல பிரச்சினைகளிலும் இ. மு. எ. ச, முன்னின்று பணியாற்றியது. இலக்கியம் பொய்மையின் வெளிப்பாடாக இல்லாமல், சத்தியத்தின் நிலைக்களனாக உயர்வதற்காக, எழுத்தாளர்களதும் இலக்கியத்தினதும் சமூகப் பணியை, சரித்திரக் கடமையை வலியுறுத்தி சமூக யதார்த்தவாதக் கருத்துகளை இ. மு. எ. ச. பரப்பியது. ஈழத்து சிருஷ்டி இலக்கியத்துக்கு எதிராக எழுந்த மலட்டுப் பாண்டியத்தின் சூன்யக் குரலை எதிர்த்துப் போராடி முறியடித்து, வெற்றிவாகை சூடி, ஈழத்தமிழ் பேசும் மக்களின் பேச்சு மொழிக்கும் இலக்கிய அந்தஸ்து தேடிக் கொடுத்ததில் இ. மு. எ. ச. முன்னின்று உழைத்தது. முதுகு சொறியும் கலையாக இருந்த இலக்கிய விமர்சனத்தை, சமூகப் பிரக்ஞை கொண்டதாகவும் ஆழமான பார்வை கொண்டதாகவும் ஆக்கி ஆரோக்கியமான பாதைக்கு இட்டுச் செல்ல எடுத்த முயற்சியில் இ. மு. எ. ச. முன்னின்றது.

இ. மு. எ. ச, தேசிய ஐக்கியத்துக்காகப் போராடியது. மக்களின் கலை, கலாசார, மொழி உரிமைகளுக்காகப் பாடுபட்டது; அந்நிய இலக்கிய, கலாசார ஊடுருவலையும் ஏகபோக ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடியதுடன், ஈழத்துப் பத்திரிகைகளில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும் என்ற எழுத்தாளர்களின் உரிமைப் போராட்டத்தை முன்னின்று நடத்தி வெற்றியும் ஈட்டிக் கொடுத்தது.

இ. மு, எ, ச. பல மாநாடுகளை நடத்தியுள்ளது. அவை வெறும் கேளிக்கை விழாக்களாக அன்றி, காலத்தின் தேவையை வலியுறுத்தி நிலைநிறுத்திய கருத்தார்ந்த நிகழ்ச்சிகளாகும் என்பது வரலாற்று உண்மைகளாகி விட்டவை!

1957ல் நடத்தப்பட்ட எழுத்தாளர் மகாநாடு— முற்போக்கு இலக்கிய போதத்துக்கு விளக்கமும் தெளிவும் கொடுப்பதற்காக நடத்தப்பட்டது.

1962ல் இ. மு. எ. ச. நடத்திய மகாநாடு — வரலாற்றில் முதல் தடவையாக கூட்டப்பட்ட தமிழ் எழுத்தாளர்களின் பொது மகாநாடாகும். ''ஈழத்து எழுத்தாளர்கள் — ஈழத்து இலக்கியம்'' என்ற உணர்வுக்கு இதுவே எழுச்சியூட்டியது.

1963ல், யாழ்ப்பாணத்தில் நடந்த இருநாள் மகாநாடு ஈழத்து இலக்கிய பாரம்பரியத்தின் தொன்மையை, சிறப்பை, பெருமையை எடுத்துரைத்தது; ஆண்டின் பிற்பகுதியில் தென் மட்டக்களப்பில் (அக்கரைப்பற்று) நடத்தப்பட்ட பிரதேச மகாநாடும் இத்தன்மை கொண்டதே. அதே ஆண்டின் நடுப்பகுதியில் கண்டியில் சிங்கள இளங் கவிஞர் சங்கத்துடன் இணைந்து நடத்திய மகாநாடு, சிங்களவர் மத்தியில், தமிழினத்துக்குள்ள சரி நிகர் உரிமைகளை அஞ்சாது எடுத்தியம்பி, பேரினவாத எதிர்ப்பை முறியடித்து வெற்றிகரமாக நடத்தப்பட்டதாகும்.

1975ல் நடத்தப்பட்ட சிங்கள — தமிழ் - முஸ்லிம் எழுத்தாளர்களின் மகாநாடு, நாட்டை எதிர்நோக்கிய அரசியல், பொருளாதார அழிவைத் தடுக்க, இனங்களுக்கிடையேயான ஐக்கியம் ஸ்தூலமாக அமைவதற்கு, மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவது முன்தேவையாகும், இனங்களின் தனித்துவம் உத்தரவாதப்படுத்தப்படவேண்டும், மக்கள் தமது பகுதி நிர்வாகங்களில் பங்கு கொள்ள உகந்த அதிகாரங்களைக் கொண்ட நிர்வாக அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற வழிமுறைகளை முன் வைத்து, இவற்றை நடைமுறைப்படுத்த அரசு காலதாமதமின்றி முன்வரவேண்டும் என வலியுறுத்தியது. எழுத்தாளர்களாகிய நாம் அன்று ஒலித்த எச்சரிக்கைச் சங்கின் முழக்கத்தை அன்றைய அரசு மட்டுமல்ல, அதன் பின்னர் முடிசூடிக் கொண்டவர்களும் உணரத் தவறி விட்டனர்.

ஈழத் தமிழ் மக்களின் தேசிய நிலைப்பாட்டை வற்புறுத்தி, அவர்களின் சமூக, அரசியல் அபிலாஷைகளை 1954ல் இருந்தே ஊக்குவித்து வந்த இ. மு. எ. ச. —ஈழத் தமிழ் மக்களை சமத்துவமான சக பிரஜைகளாக அங்கீகரிக்க

மறுத்த அரசியல் யதார்த்தமும், ஜனநாயக வாழ்வின் அச்சாணிகளான கல்வி வாய்ப்பு, உழைப்புரிமைச் சமத்துவம் போன்ற இன்னோரன்ன பிற உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டமையுமே இன்றைய தீவிரவாதத்தின் ஊற்றாக உருவெடுத்துள்ளதென்பதை ஏற்பதுடன்,

தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான எதிர்ப்பை அரசியல் - இராணுவ பலத்தால் உடைத்தெறிய முற்பட்டமையும், தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ ஆட்சியை கட்டவிழ்த்து அடக்குமுறை மேற்கொள்ளப்படுதலையும் எதிர்த்து எழுந்த மக்களின் தீவிர போராட்டத்தை 'பயங்கரவாதம்' எனத் தவறாக அரசு கணிக்தமையும், இலங்கையின் எப்பகுதியிலாயினும், தமிழர்கள் பயமின்றி வாழமுடியாது இருப்பதுடன், தமது பாரம்பரிய பிரதேசத்திலே கூட தாம் சுயாதீனமாக வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்மையுங் கண்டு இ. மு. எ. ச, ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

தமது பாதுகாப்புக்கு தனி நாடே தகுந்த உத்தரவாதம் என்ற நிலைப்பாட்டையும், அதற்கான போராட்டத்தையும் தொடர்ச்சியாக வந்த ஆட்சியாளர்களே தமிழர்கள் மீது நிர்ப்பந்தித்துள்ளனர் என்பது மூடி மறைக்க முடியாத உண்மை.

தேசிய இனப் பிரச்சினையாக முகிழ்த்து, சகல தமிழ் பேசும் மக்களையும் உள்ளடக்கி, ஒடுக்குமுறைக்கு எதிரானதாக சுவாலித்துக் கிளம்பியுள்ள விடுதலைப் போராட்டம் அதன் நோக்கிலும் போக்கிலும் தமிழர்களிடையே சமூக மாற்றத்தை நிர்ப்பந்திக்கின்ற இயக்கமாக மிளிரும் தன்மையை இ. மு. எ. ச. இறும்பூதுடன் வரவேற்கின்றது.

இனப் பிரச்சினைக்கான தீர்வென்பது எமது மக்களின் அச்சங்களைப் போக்குவதாகவும், ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதொன்றாகவும் இருத்தல் வேண்டுமென்றும், எத்தகைய அடக்குமுறைகளுக்கும் இம்மியளவேனும் இடமில்

லாத அமைப்பே இனப்பிரச்சினைக்கான உண்மையான தீர்வாக அமைய முடியும் என்பதையும் இ. மு. எ. ச. ஆணித்தரமாக வலியுறுத்துகின்றது.

தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாரம் பரிய பிரதேசத்துக்குமான பாதுகாப்பை அவர்களிடம் சந்தேகமில்லாமல் வழங்க மறுக்கும் தீர்வு எதுவும் நின்று நிலைக்க முடியாது என எச்சரிக்க விரும்புகிறது.

அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த விடுதலை இயக்க மூலவரான அஞ்சாநெஞ்சங் கொண்ட ஆறுமுகநாவலர் அவதரித்த அதே மண்ணிலே, வரலாற்றுப் புகழ் மிக்க தமிழர்களின் இராசதானியாக விளங்கிய நல்லையம் பதியிலே, அதுமீண்டும் புனர் நிர்மாணம் பெறவேண்டும் என்ற முனைப்புக் கொண்டுள்ள வேளையிலே இ. மு. எ. ச. கூட்டும் இம்மகாநாடு தமிழ் மக்களின் இலட்சியங்களை எய்த நெம்புகோலாக உதவுமென சமூகப் பிரக்ஞை கொண்ட இயக்க ரீதியாக இயங்கி வரும் இலக்கியவாதிகளாகிய நாம் நம்புகிறோம்.

— இ. மு. எ. ச. மகாநாட்டுக் குழு

15/1 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
17-10-86.

## எழுத்தாளர் மகாநா
## நிகழ்ச்சி

### காலை நிகழ்ச்சிகள்

காலை 8-30: மங்கள இசை:

'நாதஸ்வர கானவிநோதன்'
திரு. K. R. சுந்தரமூர்த்தி குழுவினர்

'நாதஸ்வர இரட்டையர்'
திரு. V. K. கானமூர்த்தி
திரு. V. K. பஞ்சமூர்த்தி } குழுவினர்

9-30: நூற் கண்காட்சி திறந்து வைத்தல்.

9-40: மங்கல விளக்கேற்றல்; திரு. வரதர்

9-45: எழுத்தாளர் கீதம்;
திருமதி பத்மா சோமகாந்தன்

10-00: வரவேற்புரை:
கலாநிதி சபா. ஜெயராசா

10-15: துவக்கவுரை:
பேராசிரியர் சு. வித்தியானந்தன்

10-45: கண்காட்சித் திறப்புரை:
திரு. சி. வீ. கே. சிவஞானம்

11-00: மௌனாஞ்சலி

11-05: தலைமையுரை:
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்
(நந்தி)

11-30: "இ. மு. எ. ச. சாதனைகள்" —
திரு. என். சோமகாந்தன்

11-45; மகாநாட்டு அறிக்கையும் விளக்கமும்
திரு. பிரேம்ஜி ஞானசுந்தரன்,
பொதுச் செயலாளர், இ. மு. எ. ச.

பகல் 12-45: நண்பகல் உணவு இடைவேளை

ாடு—17-10-86
சி நிரல்

## பிற்பகல் நிகழ்ச்சிகள்

பி. ப. 2-00: அறிக்கை பற்றி கருத்துரைகள்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
திரு. 'சொக்கன்'
திருமதி கோகிலா மகேந்திரன்
திரு. 'தெணியான்'
திரு. நீர்வை பொன்னையன்
திரு. லெ. முருகபூபதி
கலாநிதி நா. சுப்பிரமணியம்
திரு. இரா. சிவச்சந்திரன்

3.30: அறிக்கையை முன்மொழிபவர்:
கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

3-45: அறிக்கையை வழிமொழிபவர்:
திரு. ஐ. சாந்தன்
அறிக்கை அங்கீகரிக்கப்படலும்
பிரகடனமும்

4-00: கவியரங்கம்
'இன்னும் எத்தனை எத்தனை காலமோ?'
தலைவர்: திரு. இ. முருகையன்
திரு. சோ. பத்மநாதன்
திரு. கல்வயல் வே. குமாரசாமி
திரு. இ. சிவானந்தன்
திரு. புதுவை இரத்தினதுரை

மாலை 5-00: இ.மு.எ. ச. எதிர்காலத் திட்டங்கள்
திரு. டொமினிக் ஜீவா

5-30: வயலினிசை
இசைஞான திலகம்
R. இராதாகிருஷ்ணன் குழுவினர்

6-30: நன்றியுரை: திரு. எஸ். பி. ஸ்ரீதரசிங்

# அரசியற் தீர்மானம்

ஈழத்து தமிழ் மக்களின் தேசிய நிலைப்பாட்டை வற்புறுத்தி அதன் காரணமாக தமிழ் மக்களின் சமூக — அரசியல் அபிலாஷைகளை 1954 ம் ஆண்டிலிருந்து ஊக்குவித்த இ. மு. எ. ச, இன்றைய நிலையில் எமது மக்களுடனான சமத்துவமான அரசியல் அதிகாரப் பகிர்விற்குப் பதிலாக அரச அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டமையைக் கண்டு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களை சமத்துவமான சக பிரசைகளாக அங்கீகரிக்க மறுத்த அரசியல் யதார்த்தமும், சனநாயக வாழ்வின் அச்சாணிகளான கல்வி வாய்ப்பு, உழைப்புரிமைச் சமத்துவம் போன்ற இன்னோரன்ன பிற உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டமையுமே இன்றைய தீவிரவாதப் போராட்டத்தின் ஊற்றுயுள்ளது.

தமிழ் மக்களின் சனநாயக ரீதியான எதிர்ப்பை அரசியல் — இராணுவ அதிகார பலத்தால் உடைத்தெறிய முற்பட்டதும், தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ ஆட்சியைப் பரவலாக்கி வருவதும், அரசின் அடக்குமுறைக்கெதிராக எழுந்த தீவிரவாதப் போராட்டத்தை "பயங்கரவாதம்" என தவறுக கணித்தமையுமான நிலைமைகள் இலங்கையின் எப்பகுதியிலாயினும் தமிழர்கள் பயமின்றி வாழ முடியாது என்ற நடப்பியலை நிலைநாட்டியும், தமது பாரம்பரிய பிரதேசத்திலேயும் கூட தாம் சுயாதீனமாக வாழமுடியாத நிலையினை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியும் உள்ளன.

தொடர்ச்சியாக வந்த ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளே தமிழ் மக்கள் தமது பாதுகாப்புக்கு தனிநாடே தகுந்த உத்தரவாதம் என்ற நிலைப்பாட்டையும் அதற்கான போராட்டத்தையும் வலுப்பெறச் செய்துள்ளது என்பதை மறைக்க முடியாது.

இந்நிலையில் இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வென்பது தமிழ் மக்களின் மேற்குறிப்பிட்ட அச்சங்களைப்

போக்குவதான ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தீர்வாக இருத்தல் வேண்டும் என்றும், எத்தகைய அடக்கு முறைகளுக்கும் இம்மியளவேனும் இடங்கொடாத அமைப்பே இனப் பிரச்சனைக்கான உண்மையான தீர்வென்பதையும் இ. மு; எ. ச. வன்மையாக எடுத்துக் கூறுகிறது.

தமிழ் மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாரம்பரிய பிரதேசத்திற்குமான பாதுகாப்பை அவர்களிடம் சந்தேகமில்லாது வழங்க மறுக்கும் தீர்வு எதுவும் நின்று நிலைக்க முடியாதென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தமிழ் மக்கள் தம் உரிமைகளை வென்றெடுக்க நடத்தும் போராட்டத்தை பேரினவாதத்தால் திசை திருப்பப் பட்டுள்ள சிங்கள மக்களுக்கு உணர்த்தும் வகையில் செயற்படுமாறு சகல முற்போக்குச் சக்திகளுக்கும் இ. மு. எ. ச அறை கூவல் விடுகிறது. தமிழ் மக்களின் போராட்டத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதன் மூலமே சிங்கள மக்களும் தமது விடுதலையை வென்றெடுக்கக் கூடியதாயிருக்குமென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தேசிய இனப் பிரச்சனையாக முகிழ்த்து சகல தமிழ் மக்களையும், தமிழ் பேசும் மக்களையும் உள்ளடக்கி ஒடுக்கு முறைக்கு எதிரானதாக சுவாலித்துக் கிளம்பியுள்ள இப் போராட்டம் அதன் நோக்கிலும், போக்கிலும் தமிழர்களிடையே சமூக மாற்றத்தை நிர்ப்பந்திக்கின்ற இயக்கமாக மிளிரும் தன்மையைக் கண்டு இ. மு. எ. ச பூரிப்படைகிறது. இந்த எழுச்சி தேசிய இனப்போராட்ட எல்லைகளைக் கடந்து தமிழ் மக்களிடையேயும், தமிழ் பேசும் மக்களிடையேயும் நிலவும் சமூக — அசமத்துவத்தையும், கரண்டலையும், ஒவ்வாக் கொள்கைகளையும் தூக்கி எறியும் சமூக விடுதலைப் போராட்டமாக மேற்செல்லுவதை இ. மு. எ, ச வரவேற்கிறது.

சமூக — அரசியல் ஒடுக்கு முறைகளின் அழிவில் தோன்றும் புதிய ஈழத்து தமிழ்ச் சமுதாயம் தனது பண்பாட்டுத் தளத்தைப் பேணுவதாய், அதே வேளை பிற

பண்பாட்டு விரோதியாக இல்லாததாய் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ் உணர்வின் சர்வ தேசிய உள்ளடக்கத்தை எடுத்துக் காட்டுவதாய் அமைய வேண்டுமென வேண்டுவதுடன், அந்த புனிதப் பாதையில் எமது சமூக — அரசியல் விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றும் இ. மு. எ. ச வேண்டிக் கொள்கிறது.

தேசிய விடுதலை இயக்கங்களிற்கெதிராக ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கைகளையும், உலக சமாதானத்திற்கெதிரான ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கைகளையும், உலக - சமாதானத்திற்கெதிரான அதன் அச்சுறுத்தல்களையும் இ. மு. எ. ச கண்டிப்பதுடன், சகல அடக்கு முறைகளுக்கும் எதிராக ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகள் நடத்தி வரும் நியாயமான போராட்டத்தை ஆதரிக்கிறது.

பாதீனப்படாத மனிதனை தனது சமூக - அரசியல் இலட்சியமாகக் கொண்ட இந்த எழுத்தாளர் சங்கம் அந்த நிலையினை ஊறுபடுத்துவனவற்றை கலா ரீதியாக வெளிக் கொணர்ந்து, சமகாலப் பிரச்சனைகளையும் சமத்வக் கோட்பாட்டையும் வற்புறுக்தும் படைப்புகளை வரவேற்கிறது. இவை அடக்குமுறையின் பனித நிலை இன்னல்களை, மானுடத்தை இழிவு, படுக்தும் தன்மையினை எடுத்துக் காட்டும் ஆக்கங்களாய் இருத்தல் வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறது.

இந்தப் பெரும்பணியைச் செய்வதற்கு எழுத்தாளனானவன் உள்ள வாதங்களுள் முற்போக்கானதொரு வாதத்தை கடைப்பிடிப்பவனாக மாத்திரம் இருக்காது, இயங்கியல் முரணுறுவாத தெளிவுடைய கருத்து நிலையுடையவனாகவும் இருத்தல் அவசியம் என வற்புறுத்துகிறது.

இன்றைய எமது போராட்ட நிலையில் சோஷலிச யதார்த்த வாதம்; தனது அரசியற் கோட்பாட்டினாலும், கலை அழகியற் கோட்பாட்டினாலும் நம்மை வழி நடத்தும் தத்துவமாய் அமைய வேண்டுமென இ. மு. எ. ச. வற்புறுத்துகிறது.



★

# கலாசாரத் தீர்மானம்

கலை இலக்கியத் துறைகளில் இ.மு.எ.ச. முன்வைத்த கலை — அழகியற் கோட்பாடு மென்மேலும் பலம் பெற்று வருவதை இன்றைய பல்துறை ஆக்கங்கள் புலப்படுத்து கின்றன. கலை இலக்கியத் துறைகளில் முற்போக்கு அழகியற் கோட்பாட்டை கட்டி வளர்ப்பதற்கு முன்னோடிகளாக நின்ற எமது உறுப்பினர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவிக் கின்றோம். அவர்கள் வகுத்த பலம் பொருந்திய அடித் தளத்தின் மீது பாதங்களைப் பதித்து முன்செல்லும் இளந் தலைமுறை சிருஷ்டியாளர்களையும் விமர்சகர்களையும் இ. மு. எ. ச, உற்சாகத்துடன் வரவேற்கிறது.

கலாசார சீரழிவுகளையும், முதலாளித்துவ வெகுசன பண்பாட்டு ஆதிக்கத்தையும் எமது சங்கம் எதிர்த்து வந் துள்ளது. ஆபாச இலக்கியங்களும், திரைப்படங்களும், போதைப் பொருட்களும் ஒழிக்கப்படுவதற்கு எடுக்கப் பட்ட நடவடிக்கைகளை நாம் மனதார வரவேற்கிறோம். மலிவு இலக்கியங்களிற்கு எதிரான எமது போராட்டம் மேலும் வலிமைப்படுத்தப்படல் வேண்டும்.

எமது பாரம்பரியமான கலைகள் புதுமெருகூட்டப்படு வதையும், எமது அரங்கு உயர்ந்த தரத்தை எட்டுவதை யும் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இந்த முயற்சிகளுக்கு வித்திட்ட முன்னோடிகளையும், அவர்களின் வழிச் செல்லும் புதிய தலைமுறையினரின் முயற்சிகளையும் பாராட்டுகிறோம்.

நடுநிலை விமர்சனம் போலியானது. மதிப்பீடுகள் சார் புடையவை என்ற விஞ்ஞான விதியை ஏற்றுக்கொண்டு நடுநிலை விமர்சனம் என்ற போலித்தனத்தை நிராகரிக் கின்றோம். மேலும் நவமாக்சிசம் பற்றிய எமது நிலைப்பாடு தெளிவு படுத்தப்பட்டுள்ளது. எமது உறுப்பினர்கள் எழு திய விமர்சனக் கட்டுரைகளில் நவமாக்சிசத்தில் உட் பொதிந்துள்ள பலவீனமும், பிற்போக்குத்தனமும் நன்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

ஆக்கங்களை மலினப்படுத்துதல் எமது மொழியின் வளர்ச்சியைத் தடை செய்யும் என திட்டவட்டமாகத் தெரியப்படுத்துகிறோம். விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளில் ",எளிமை" தருக்கப் போலியாகும்.

எமது பண்பாட்டு எழுச்சியின் முதல்வரான ஆறுமுக நாவலரின் இல்லம் கலாசார நிலையமாக்கப்பட்டு தேசிய சொத்தாக்கப்படல் வேண்டுமென்ற இ. மு. எ. ச. வின் நீண்டகாலப் போராட்டம் படிப்படியாக வெற்றிகண்டு வருவதைத் தெரியப்படுத்துகின்றோம். அந்தப் பணியை நிறைவேற்றிய சம்பந்தப்பட்டவர்களுக்கு எமது நன்றியறிதலைக் கூறுகிறோம்.

தமிழ் மொழி மூலமாகிய உயர் கல்வி இந்த மண்ணிலே கட்டியெழுப்பப்படுதற்கு யாழ். பல்கலைக் கழகம் மேற்கொண்டுவரும பணிகளைப் பாராட்டும் வேளை, யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவப்படுவதற்கு எமது சங்கம் மேற்கொண்ட ஆக்கபூர்வமான செயல்களையும் நினைவு கூருகிறோம். கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியும் போதனுமொழியாக்கப்படல் வேண்டுமென்பதை இச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகிறோம்.

ஆரோக்கியமான கருத்துக்களையும், எதிர்வாதங்களையும் வரவேற்கத் தயாராகவிருக்கும் அதேவேளை, அவையனைத்தும் கண்ணியமான முறையில் நடத்தப்படவேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டுகிறோம். விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர் எவருமிலர். எனினும் விமர்சனங்கள் காழ்ப்புணர்ச்சிகளாகவும், தனிநபர் தாக்குதல்களாகவும் அமைவதைக் கண்டிக்கிறோம்.

கலை இலக்கியங்களிற்குரிய கருத்து நிலையும் கலாரசனையும் சமூகப் பெறுமானம் கொண்டதாக இருத்தல் வேண்டுமென்பதை மீண்டும்வலியுறுத்துவதுடன், இந்த மகத்தான பணியை எழுத்தாளர்களும் கலைஞர்களும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென உரிமையுடன் வேண்டுகிறோம்.

☆

ஸ்ரீ காந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22156